நியூ பாரத்
பதின்ம மேல்நிலைப் பள்ளி
திருவாரூர்

# நீதிக்கதைகள்

கீழ் பாலர்

# 1.நேர்மையான விறகுவெட்டி



ஒரு காட்டில் விறகு வெட்டி ஒருவன் விறகுகளை வெட்டிக் கொண்டிருந்தான்.



அப்போது , அவன் கையில் உள்ள கோடாரி கைத்தவறி ஆற்றில் விழுந்தது. கோடாரி இல்லாமல் விறகுவெட்டியால் எந்த விறகுகளையும் வெட்டமுடியவில்லை. அந்த ஏழையான விறகுவெட்டி சோகத்தில் ஆழ்ந்தான்.



அவர் அழுகையைக் கேட்ட ஒரு தேவதை விறகுவெட்டியின் முன் தோன்றினாள். கவலைப்படாதே , விறகுவெட்டி உன் கோடாரியை நான் கொண்டு வருகிறேன் என்றது தேவதை.



உள்ளே போன தேவதை தங்கக் கோடாரியுடன் திரும்பி வந்தாங்க. விறகுவெட்டியிடம் தேவதை தங்கக் கோடாரியைக் கொடுத்தது. இந்த கோடாரி என்னுடையதில்லை . என்னுடையது இரும்பால் ஆனது.



மறுபடியும் , தண்ணீருக்குள் சென்ற தேவதை வெள்ளிக் கோடாரியை எடுத்துக் கொடுத்தது இதுவும் என்னுடையது இல்லை என்றான் விறகுவெட்டி.



அவனது நேர்மையைக் கண்ட தேவதை கடைசியாக அவனுடைய இரும்புக் கோடாரியை சேர்த்து மூன்று கோடாரிகளையும் அவனிடம் தந்தது.

**நீதி:**




**“நேர்மையே வாழ்க்கையின் மிகப்பெரிய செல்வம்”**


## 2.தாகமும் காகமும்




அது ஒரு கோடைக்காலம் காட்டிலுள்ள குளம் , ஆறுகள் எல்லாம் அதிக வெப்பத்தால் வறண்டு போனது. அந்த காட்டில் ஒரு காகம் ஒன்று இரைத்தேடி பறந்து வந்தது. தண்ணீர் தேடி காகம் அலைந்தது. அதனால், மிகவும் சோர்வானது.




அப்போது , அங்கு ஒரு பானை இருந்ததை காகம் கவனித்தது. ஆனால், அப்பானையில் தண்ணீர் மிகவும் கீழே இருந்தது.



காகம், எவ்வளவோ முயற்சி செய்தும் காகத்தால் பானையில் உள்ள தண்ணீரை குடிக்க முடியவில்லை.



காகம், உடனே கீழே இருந்த கல்லை எடுத்து வந்து உடைப்பதற்காக பானையில் போட்டது. பானை உடையவில்லை. ஆனால், தண்ணீர் மேலே வருவதை கவனித்தது.




உடனே, நிறைய கற்களை எடுத்து வந்து பானைக்குள் போட்டது . தண்ணீரும் கொஞ்ச கொஞ்சமாக மேலே
வந்தது. தாகம் தீர காகம் தண்ணீரை குடித்தது.

**நீதி:**



**"முயற்சி திருவினையாக்கும்"**


# 3. எலியும் தவளையும்



ஒர் அழகான ஊரில் ஒரு ஆற்றின் கரையில் தவளையும், எலியும் நண்பர்களாக இருந்தன.தவளைக்கு உணவே கிடைக்காது. ஆனால், எலியோ வீட்டில் உள்ள உணவுகளை சாப்பிட்டு சேமித்தும் வந்தது.




அதனால், தவளைக்கு எலியைப் பார்த்து கொஞ்சநாளாக வெறுப்பாகிவிட்டது. ஏனென்றால், எலி ரொம்ப சுகமாக சாப்பிட்டு, நிம்மதியாக தூங்கிக்கொண்டிருப்பதால் தவளைக்கு எலியை சுத்தமாக பிடிக்கவில்லை.



எலியை ஒழித்துக்கட்ட தவளை திட்டம் தீட்டியது. தவளை எலியை ஏமாற்ற நாம் ஆற்றின் மறுகரைக்குச் சென்று விளையாடலாம் என்று சொன்னது.



நான் எப்படி அங்கு வரமுடியும். எனக்குதான் நீச்சல் தெரியாதே! என்றது எலி .அதற்குத் தவளை உன் வாலை என் கால்களில் கட்டிக்கொண்டு நீந்து மறுகரைக்கு போய்விடலாம். எலியும் தவளையின் ஆசை வார்த்தைகளை நம்பி பயணத்திற்கு தயார் ஆனது.





மறுநாள் தவளை எலியின் வாலை அதன் கால்களில் கட்டிக்கொண்டு நீருக்கு அடியில் நீந்த ஆரம்பித்தது. ஆனால், எலியால் தண்ணீரில் மூச்சு விட முடியவில்லை.



தவளை தொடர்ந்து நீந்தி ஆற்றின் மறுகரையை அடைந்தது. கரைமேல் ஏறி பார்க்கும்போது எலி இறந்துவிட்டது. தவளைக்கு ஒரே மகிழ்ச்சி. இறந்த எலியைத் தூக்கிச் செல்ல கழுகு ஒன்று வட்டமிட்டது.




ஆனால், தலைகால் புரியாமல் மகிழ்ச்சியில் இருந்த தவளை எலியின் வால் காலில் கட்டியிருப்பதை மறந்தது. அதற்குள் கழுகு வந்து எலியுடன் சேர்த்து தவளையையும் தூக்கிச் சென்றது.

**நீதி:**




**“தவறு செய்பவர்கள் தண்டனையில் இருந்து தப்பிக்க முடியாது”. நல்ல நண்பர்களை தேர்ந்தெடுப்பது மிகவும் முக்கியம்.**

# 4.கொக்கும் ஆமையும்




ஒரு கிராமத்தில் ஒரு குளம் ஒன்று இருந்தது. அக்குளத்தில் இரண்டு கொக்குகளுடன் ஆமை ஒன்று வாழ்ந்து வந்தது.



ஒரு வருட காலமாக மழை எதுவும் பொழியாததால் நீர்நிலை வற்றியது. அந்த குளத்தில் இருந்து மற்றொரு குளத்திற்கு செல்ல முடிவு எடுத்தன கொக்குகள்.




அதை கேட்ட ஆமை நானும் உங்களுடன் அங்கு வருகிறேன் என்றது. கொக்குகளும் இதை ஒத்துக்கொண்டு ஆமையையும் அந்த குளத்திற்கு கூட்டிச் செல்ல நினைத்தன. ஆனால், ஆமையால் பறக்க முடியாது. எப்படி கூட்டிச் செல்வது என்று யோசித்தன கொக்குகள்.



உடனே, கொக்குகளுக்கு யோசனை தோன்றியது. ஆமையை தூக்கிச் செல்ல நினைத்தன.



குச்சியை ஆமை அதன் வாயால் பிடித்திருக்க, மற்றொரு இரண்டு முனையையும் கொக்குகள் தனது அலகால் பிடித்துக் கொள்ளும்படி சொன்னது. ஆமையிடம் , ஏற்கனவே கொக்குகள் கூறியிருந்தன. எந்த ஒரு சூழ்நிலையிலும் ‘‘நீ பேசவே கூடாது’’ என்று.




ஆனால், ஆமையோ அதை மறந்து விட்டு பேச கீழே விழுந்து இறந்து விட்டது.

**நீதி:**




**"ஆபத்தான நேரங்களில் அவசரப்படக் கூடாது".**

# 5. நரியும் ஆடும்



ஒரு நாள் ஒரு காட்டில் வயதான நரி ஒன்று இரைதேடி அலைந்தது. அதற்கு இரை எதுவும் கிடைக்காததால் சோர்வுற்று வழியில் இருந்த கிணற்றில் தடுமாறி விழுந்தது.




அந்த கிணறு மிகவும் ஆழமாக இருந்ததால் நரியால் வெளியே வர முடியவில்லை.




அந்த வழியாக ஆடு ஒன்று வந்தது. நரியைப் பார்த்து , நரியாரே! கிணற்றுக்குள் என்ன செய்கிறீர்கள் என்று கேட்டது ஆடு.



இல்லை, இங்கு உள்ள புற்கள் மிகவும் சுவையாக உள்ளது. அதனால்தான் சாப்பிடுகிறேன். ஆடு உடனே நானும் வந்து சாப்பிடலாமா என்றது.



நரி , ம்ம்ம்.... சேர்ந்தே சாப்பிடலாமே உள்ளே இறங்கி வா என்றது.



ஆடு தாவி உள்ளே குதித்தது . ஆடு ஏமாந்த சமயம் பார்த்து நரி.




ஆடு தலையில் கால் வைத்து நரி ஏறிதப்பிச் சென்றது. ஆடு தன் அறியாமையை நினைத்து வருந்தியது.

**நீதி:**



**“நமக்குத் தெரியாத நபர்களுடன் நாம் பார்த்துப் பழக வேண்டும் . இல்லையெனில் , அதுவே நமக்கு ஆபத்தாக நேரிடும்”.**


# 6. தீயவர்களுடன் சேர்ந்தால் தண்டனையே கிடைக்கும்



ஒரு விவசாயின் விளைநிலத்தை கொக்குகள் நாசப்படுத்தின.



கொக்குகளை பிடிப்பதற்காக வயலில் வலையை விரித்தான் விவசாயி.



அந்த வலையில் கொக்குகளுடன், ஒரு நாரையும் சிக்கிக் கொண்டது. வலையில் இருந்து தப்பிக்க முயற்சி செய்த நாரைக்கு காலில் அடிபட்டதுதான் மிச்சம்.



அப்போது நாரை விவசாயியைப் பார்த்து ‘‘ஐயா என்னை விட்டுவிடுங்கள்’’ என்று அவரிடம் கெஞ்சியது.




நான் கொக்கு இல்லை , நாரை! என் சிறகுகளைப் பார்த்தாலே உங்களுக்கு தெரியும். நான் எனது பெற்றோர்மீது மிகுந்த பாசம் வைத்திருக்கிறேன், நான் இல்லையென்றால் எனது பெற்றோர் பெரிதும் கஷ்டப்படுவார்கள்''என்று கண்ணீர் வடித்தது.



அதைக் கேட்டு சிரித்த விவசாயி, "நீ சொல்வதெல்லாம் சரிதான்'' ஆனால், எனது நிலத்தில் திருட வந்த கொக்குகளுடன் நீயும் சேர்ந்து வந்தாயல்லவா? நீ சாகத்தான் வேண்டும் !" என்று கொக்குகளுடன் நாரையையும் பிடித்துச் சென்றார் விவசாயி.

நீதி:



**“நாம் நல்லவர்களாய் இருந்தாலும் கூட தீயவர்களுடன் சேர்ந்து தீயசெயல்களைச் செய்தால் தண்டனை நிச்சயம்”.**

# 7. ஒழுக்கம் உள்ளவனே சிறந்தவன்



ஒருநாள் மாலையில் பள்ளிக்கூடம் முடிந்து சிறுவன் ஒருவன் வீடு திரும்பினான்.



அவன் சென்ற வழியில் ஆற்றில் தண்ணீர் கரைபுரண்டு ஓடிக்கொண்டிருந்தது.



அச்சிறுவனுக்கு, நீச்சல் தெரியாது. எனினும் ஆற்றில் இறங்கினான். தண்ணீர் வேகத்தில் அவன் அடித்துச்செல்லப்பட்டான்.



ஆற்றில் தத்தளித்த படியே “காப்பாத்துங்க காப்பாத்துங்க”என்று கத்தினான்.அச்சமயம் அந்த வழியாகச் சென்ற பெரியவர் ஒருவர் அவனைக் காப்பாற்றினார்.



அச்சிறுவன், அவரை கைக்கூப்பி வணங்கினான். “அவருக்கு நன்றி தெரிவித்தான்”. என் அப்பா மிகப்பெரியச் செல்வந்தர் என்னவேண்டுமானாலும் கேளுங்கள் என்றான் அச்சிறுவன்.




எனக்கு எந்த பரிசும் வேண்டாம் . நீ நல்ல கல்வியும் , ஒழுக்கமும் பெற்று இருந்தால் போதும் நான் உன்னை நினைத்து வருந்தும் அளவிற்கு வைத்துவிடாதே. ஒரு மோசமானவனைக் காப்பாற்றி விட்டோமே என்று நான் நினைக்கும் அளவிற்கு வைத்து விடாதே. இதுவே , நீ எனக்கு கொடுக்கும் பரிசாகும் என்றார் பெரியவர்.

**நீதி :**




**"ஒழுக்கம் உயர்வு தரும்"**

# 8.கல்வி கற்பவனே உயர்ந்தவன்




ஓர் ஊரில் ஒரு குருவிடம் மூன்று சீடர்கள் கல்வி கற்று ஊர் திரும்பினார்கள்.



அந்த சீடரில் ஒருவன், அந்த நாட்டின் அரசனைப் பற்றி பாடினான். அதனால் மகிழ்ச்சியடைந்த அரசன் அவனுக்கு பரிசு அளித்ததோடு , அரசவைக் கவிஞனாகவும் ஆக்கினான்.




இரண்டாவது சீடன், அன்னதானம் செய்யும் ஒரு சத்திரத்தில் சமையல்காரனாகச் சேர்ந்து வேலை பார்த்தான்.




மூன்றாவது சீடன், தனது கிராமத்தில் உள்ள சிறுவர்கள் கல்வியறிவு இல்லாததால் அவர்களுக்கு கல்வியறிவு புகட்ட ஆசைப்பட்டான். சிறுவர்களைச் சேர்த்துக்கொண்டு , ஒரு மரத்தடியில் அவர்களுக்குக் கல்வி கற்றுக் கொடுத்தான்.



பதினைந்து ஆண்டுகளுக்குப் பின்னர் சீடர்கள் மூவரும் குருவைக் காண குருகுலத்திற்குச் சென்றனர்.அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை ஒவ்வொருவரிடமும் கேட்டுத் தெரிந்து கொண்டார். குரு மற்ற இரண்டு சீடர்களைக் காட்டிலும் மூன்றாவது சீடனுக்கே முக்கியத்துவம் கொடுத்தார். இது மற்ற சீடர்களுக்கு வருத்தத்தை அளித்தது.




ஒருநாள் அந்த இரண்டு சீடர்களும் தங்களது வருத்தத்தை வெளிப்படுத்தினார்கள்.குரு சிரித்தார்.




முதல் சீடனிடம் "நீ அரசவைக் கவிஞன்! பாடல் இயற்றியிருக்கிறாய். உனது படைப்பு படிப்பவர்களுக்கு மகிழ்ச்சி தருகிறது. நீயும் உயர்ந்தவன்தான்!"




இரண்டாவது சீடனிடம் , "நீ சீறந்த உணவு சமைத்துப் போட்டதன் மூலம் தாய்க்கு ஒப்பாகியுள்ளாய்; நீயும்' உயர்ந்தவன்தான்!"



‘‘ஆனால் , அறியாமையில் இருப்பவர்களுக்கு கல்வி அளிப்பது என்பது பார்வையில்லாதவனுக்குப் பார்வை அளிப்பது போல அந்தப் பணியை இவன் செய்திருக்கிறான். அதனால் உங்களில் இவனே சிறந்தவன்’’ என்றார் குரு.



சீடர்கள் இருவரும் எங்களது பொறாமைக் குணத்தால் இப்படி நடந்துகொண்டோம் என்று குருவிடம் மன்னிப்புக் கேட்டனர்.



**நீதி :**

**“கல்வி ஒன்றே சிறந்த மனிதனை உருவாக்குகிறது.”**

**மேலாண்மைக்குழு உறுப்பினர்கள்:**

திரு. கோ. நாகராஜன் B.A., (நிறுவனர்)

திருமதி நா. பிரகதாம்பாள்., B.A., (தாளாளர்)

Rtn. Dr. நா. முரளிதரன், M.A.,M.Phil,B.Ed., D.Litt(USA), (முதல்வர்)

திருமதி. Dr.சு. அருணா முரளிதரன், M.Sc.,B.Ed.,M.Phil,

(துணை முதல்வர்)

**நிர்வாகக்குழு உறுப்பினர்கள்**

நல்லாசிரியர் திருமதி இரா. கமலா., B.A., B.Ed .,(துணை முதல்வர்)

நல்லாசிரியர் திருமதி ந. விஜயலெட்சமி, M.A.,B.Ed.,(துணை முதல்வர்)

திருமதி. ஸ்ரீ. புவனேஸ்வரி, B.A., B.Ed .,(துணை முதல்வர்)

நல்லாசிரியர் திரு.அ. ராஜதுரை, M.Sc., M.Phil, B.Ed.,

(ஒருங்கிணைப்பாளர்)

திருமதி.வெ. கவிதா, M.Sc., B.Ed., (ஒருங்கிணைப்பாளர்)

**முதல் பதிப்பு: May - 2025**

**வடிவமைப்பு**

திருமதி. ந. இராதிகா, B.Lit., DCA.,DOA

செல்வி. S.அட்சயா, M.Sc., DCA

**அச்சுரிமை:**

நியூ பாரத் பதின்ம மேல்நிலைப் பள்ளி, திருவாரூர்.

# NOTES